**15.04.2026**

அ.வ.எண்.**87/2016**

<u>பி.சா.**1** சந்திரா குறுக்கு விசாரணை</u>

**1**. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர்களுடைய சொத்தை நான் தடுக்கிறேன் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார் ஆனால் என்னுடைய சொத்தைதான் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். தாவாசொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் **3** செண்ட் இருக்கும். நான் எப்போது என்னுடைய சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் ஜூலை, **2002**ம் ஆண்டு கிரையம் வாங்கினேன். வாதியின் சொத்தை எப்போது அவர் கிரையம் வாங்கினார் என்றால் சரியான தேதி தெரியவில்லை, ஆனால் நான் வாங்கிய பிறகுதான் அவர் கிரையம் பெற்றார். நான் வீடு கட்டும்பொழுதுதான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தாரா என்றால் சரியல்ல, நான் கட்டுவதற்கு முன்பே இந்த வழக்கை வாதி தாக்கல் செய்தார்.

**2**. வாதி தாவாசொத்தை வாங்கிய உடனே வீடு கட்டிவிட்டார்கள் என்றால் சரிதான். **2003**ம் வருடமே வாதி வீடு கட்டிவிட்டார் என்றால் சரிதான். வாதி வீடு கட்டிய பிறகு இதுநாள் வரையில் வாதி வீடு கட்டிய இடத்திற்கு ஆட்சேபணை செய்யவில்லை என்றால் தற்போதுதான் நான் வீடு கட்டும்போது வாதி என்னுடைய இடத்தை சேர்த்து வீடு கட்டியுள்ளார் என்ற விவரம் தெரியவந்தது. வாதியின் இடம் என்னுடைய சொத்திற்கு

எந்த பக்கம் உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு நான் எதிரிடை பாத்தியம் அல்லது வேறு ஒரு புது வழக்கை ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3. 2016ம்வருடம் இந்த வழக்கின் அழைப்பாணை வந்த பிறகு வாதி என்னுடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார் என்ற விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விவரம் எப்படி தெரிய வந்தது என்றால் நான் வீடு கட்டுவதற்கு முன்பு மேஸ்திரி வைத்து அளந்து பார்த்து போது தெரிய வந்தது. அதன்பிறகு நான் வருவாய் துறை மற்றும் நகராட்சி மூலம் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை, நாங்கள் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் வைத்து அளந்து பார்த்த போது வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விவரம் தெரிய வந்தது. நீதிமன்ற ஆணையர் அளந்த பார்த்த அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் உண்மை நிலவரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

4. வாதி என்னுடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் பி.சா.ஆ.1 கிரைய பத்திரம் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த பங்காரசுவாமி என்பவர்தான் வாதிக்கும் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலத்தில் உள்ள ஜக்குபந்தி என்னுடைய கிரைய பத்திரத்தில் உள்ள ஜக்குபந்திதான் என்றால் சரிதான்.

என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் காட்டியுள்ள தெற்கு பக்கம் உள்ள ஐக்குபந்தி நிலத்தைதான் வாதி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பி.சா.ஆ.1ன்படி என்னுடைய சொத்து 1292 சதுரடி என்றால் சரிதான். வாதியின் கிரைய ஆவணத்தின்படி அவர்களுக்கு 1320 1/2 சதுரடி சொத்து பாத்தியம் என்றால் சரிதான்.

5. நான் மேஸ்திரி வைத்து அளந்த பிறகு வாதியிடம் என்னுடைய இடத்தை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று பிரச்சனை செய்தேன் என்றால் இல்லை. 2016ம் வருடம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்சொன்ன சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல, எனவே நான் உண்மையை மறைத்து வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு செல்லதக்கது, எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.